திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, பாடப் புத்தகங்களை அச்சிட்டுப் பள்ளிகளுக்கு வழங்குவதைப்போல பள்ளிகளிலுள்ள நூல் நிலையங்களுக்குத் தேவையான புத்தகங்களையும் அச்சிட்டு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பாடப் புத்தகங்களாக அச்சிட்டு வெளியிடுகிற நூல்களும் நூல் நிலையங்களில் இடம் பெறுகின்றன. நூல் நிலையங்களுக்குத் தேவையான புத்தகங்கள் முழுவதையும் அச்சிட்டு வழங்குவது என்பது இயலாது. உலகம் முழுவதிலும் இருக்கக்கூடிய தேவையான நூல்களை வாங்கி நூல் நிலையங்களில் வைக்க வேண்டும்.

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த பாடப் புத்தக நிறுவனத்தில் வல்லுநர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த வல்லுநர்கள் யார் யார் என்று விபரத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் தற்போது இல்லை. ஒவ்வொரு பாடத்திற்கும் 3, 4 வல்லுநர்கள் இருக்கிறார்கள். அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

சிறுவாணிப் பகுதியை சுற்றுலா மையமாக்கல்.

* 603. வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

சிறுவாணிப் பகுதியை சுற்றுலாப் பகுதியாக ஆக்க அரசு ஆலோசித்து வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சிறுவாணிப்பகுதியை சுற்றுலா மையமாக மாற்றியமைக்க ஏதேனும் வாய்ப்பு இருக்கிறதா என்று கண்டறியப்பட்டுள்ளதா? அதற்கு எவ்வளவு தொகை செலவழிக்க வேண்டியுள்ளது என்ற விபரம் அறியப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சிறுவாணிப் பகுதியை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. அதற்குக் காரணம் சிறுவாணி கேரள மாநில எல்லைக்குள் இருக்கிறது. அவர்கள் அனுமதியோடுதான் நாம் எதாவது செய்ய முடியும். சுற்றுலா மையமாக்க வேண்டுமானல் அவர்களுடைய எல்லைக்குள் இருப்பதால் அவர்கள்தான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நீரினைத் தூய்மைப்படுத்துகின்ற திட்டம் மட்டும் தான் தமிழ்நாட்டில் இருக்கிறது. அந்த இடம் சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக இருக்காது.

1975 ஏப்ரல் 9]

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, சிறுவாணியின் கீழ்ப் பகுதியில் கோவை நகரசபையின் மூலம் தங்கும் விடுதி கட்டப் பட்டிருக்கிறது. அதைப்போல மேல்பகுதியில் மைலம் பங்களா என்று கட்டியிருக்கிறார்கள். அந்த விடுதிகளில் சுற்றுலாப் பயணிகள் தங்கு வதற்கு இடமளிக்கும்படி நகரசபைக்கு உத்திரவிடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்தத் துறைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அந்த ஓய்வு இல்லங்கள் எல்லாம் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்று கருதுகிறேன். அவர்கள்தான் அதற்கு வேண்டிய வசதி வாய்ப்புகளைச் செய்து தரவேண்டியிருக்கும். ஏராளமான மக்கள் வந்து, தங்குவதற்கு இடம் இல்லாமல் தவிக்கிறார்கள் என்ற நிலை ஏற்படும்போதுதான் சுற்றுலா வாரியத்தின்மூலம் தங்கும் விடுதி கட்ட ஏற்பாடு செய்யப்படும். அப்படிப்பட்ட நிலைமை அங்கு இல்லை. இப்போது அங்கே இருக்கின்ற தங்கும் விடுதிகளில் யார் யாருக்கு இடம் ஒதுக்குவது என்பதை அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, சிறுவாணிக் குடிநீர்த் திட்டத்திலிருந்து கோவை நகர மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக் கிறது. அந்த இடம் ஒரு பாதுகாப்பான இடமாக இருக்க வேண்டும். ஆகவே, பிரயாணிகள் அங்கு வருவதற்கு ஏற்பாடு செய்யாமல், அதை ஒரு சுற்றுலா இடமாக அபிவிருத்தி செய்யாமல் பாதுகாப்பான இடமாகவே தொடர்ந்து இருக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். நீரைத் தூய்மைப்படுத்தும் இடம்தான் நம்முடைய எல்லைக்குள் இருக்கிறது. அது எப்போதும் பாதுகாப்பான இடமாக இருக்கவேண்டும்; அப்படித்தான் இருந்துவருகிறது. அதனால் அதை சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக மாற்றுவதற்கில்லை.

THENGAPATTANAM-KUZHITHURAI ROAD.

*604. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken to reconstruct the culvert one furlong north of Thengappattanam junction on the Thengappattanam-Kuzhithurai Road?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பாலத்தை அகலப் படுத்தும் பணிக்கு ரூ. 10,000-க்கான மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டு இப்பணி நிறைவேற்றுவதற்கு ஒப்படைக்கப்பட்டது.